தமிழில்
ஆங்கிலத்தில்
பின்னர் மாற்றி எழுதியது

சாந்திப்பிரியா
ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
மேபில் ஹேனஸ் போடே




## 37: மன்னன் மஹேசன்

ஜெத்ததிஸ்ஸாவின் மரணத்திற்குப் பின் மஹாசேனா ஆட்சிக்கு வந்தார். அவர் இருபத்தி ஏழு வருடங்கள் ஆட்சி செய்தார். வேறு நாட்டிற்கு முன்னர் தப்பி ஓடியிருந்த தேரா சம்ஹமித்தா அவருடைய பட்டாபிஷேகத்திற்கு வந்தார். அந்த மன்னன் பதவி ஏற்றதும் அவர் அந்த மன்னனை பயன் படுத்தி தேரா மஹாவிகாராவை அழிக்க மனதுக்குள் முடிவு செய்தார். மன்னனிடம் அவர் கூறினார் 'மன்னா மஹாவிராகாவில் தங்கி உள்ளவர்கள் வினயாக்களை சரிவர போதிப்பதில்லை. ஆனால் நாம்தான் அந்த போதனைகளை முறையாகப் போதிக்கின்றோம்' எனக் கூறி அவர் மனதைக் கெடுக்கத் துவங்க இனி மஹாவிஹாராவில் உள்ள பிட்குகக்களுக்கு எவரேனும் தானம் செய்தால் அவர்கள் மீது நூறு பணம் அபராதம் விதிக்கப்படும் என மன்னன் அறிவித்தார்.

ஆதனால் அங்கிருந்த பிட்குக்கள் அதை விட்டு வெளியெறி மலாயா மற்றும் ரோஹனாவுக்குச் சென்று விட்டனர். இப்படியாக மஹாவிராகா ஒன்பது வருடங்களாக காலியாகக் கிடந்தது. ஒருவரும் அற்ற இடம் மன்னனுக்குச் சொந்தமாகி விடும் எனக் கூறி மன்னனின் மனதை மாற்றிய அந்த தீய எண்ணம் கொண்ட தேரா அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டார். போகும் முன் மக்கள் மனதிலும் அப்படிப்பட்ட தீய எண்ணத்தை விதைத்து விட்டு சென்று விட்டார்.

தேரா சம்ஹமித்தாவிடம் நெருக்கமாக இருந்த சோனா என்ற மந்திரி ஏழு மாடிக் கட்டிடமான லோஹபாதசாவை வெட்கமற்ற

பிட்குக்களின் துணையோடு தரை மட்டம் ஆக்கினார். அதில் இருந்த விலை உயர்ந்த பொருட்களை மற்ற விகாராவில் இருந்தவர்கள் எடுத்துப் போயினர் என்றாலும் பெரும்பான்மையானவை அபயகிரி மடத்தில் இருந்தவர்களுக்குக் கிடைத்தது. அதனால் அபயகிரி மடம் செல்வம் மிக்க விகாராவாயிற்று. சோனா மற்றும் தீய தேரா சம்ஹமித்தாவின் பேச்சைக் கேட்டு நடந்த மன்னன் பல தீய காரியங்களை தன்னை அறியாமல் செய்து வந்தார். பாசினடிஸ்ஸபப்பதாவில் இருந்து அற்புதமான சிலையை கொண்டு வந்து மீண்டும் அபயகிரி விகாராவில் வைத்தார்.

அங்கு புனித அறைக் கட்டி, போதி மரத்தை நட்டு, நான்கு பக்கச் சுவர் எழுப்பினார். குக்குட்டா *(Kukkuta)* என்ற பரிவனாவையும் அங்கு கட்டினார். அபயகிரி விகாராவுக்கு அந்த தேரா சம்ஹமித்தா மூலம் அரசு மரியாதைக் கிடைத்தது.

மேஹாவன்னபைய்யா *(Meghavannábhaya)* என்ற அமைச்சர் மன்னனுக்கு எதிராக மாறினார். அவர் மஹாவிராஹாவை மன்னன் அழித்து விட்டாரே எனக் கோபமடைந்து மலாயாவுக்குச் சென்று அங்கு பெரும் படையை திரட்டிக் கொண்டு துாருதிஸ்ஸகா குளத்தருகில் *(Dúratissaka-tank)* தங்கினார்.

அதைக் கேட்ட மன்னன் தன்னுடைய படையினருடன் அங்கு சென்றார். மலாயாவில் இருந்து வந்திருந்த மேஹாவன்னபைய்யா குடியும் கும்மாளமும் போட்டுக் கொண்டு தன்னுடைய நண்பனான மன்னன் தன்னுடன் இருந்தால் அதை இன்னமும் அனுபவிப்பேன் என எண்ணியவாறு இரவில்

எவருக்கும் தெரியாமல் மன்னனை சந்தித்தார். அவரை நம்பி அவருடன் உணவு அருந்திய மன்னன் அவர் எப்படி தனக்கு எதிரியானார் என்ற விவரத்தைக் கேட்க மஹாவிகாராவை அவர் அழித்து விட்டக் கோபத்தில்தானன் தான் அப்படி செய்ததாக மேஹாவன்னபைய்யா கூறினார்.

தன்னை மன்னித்து விடுமாறும் அந்த விகாராவை தான் மீண்டும் புதுப்பிக்கின்றேன் எனவும் மன்னன் வாக்குறுதி தந்து விட்டு தன் தலை நகருக்குத் திரும்பினார் அவருடன் மேஹாவன்னபைய்யா செல்லாமல் புனர் பணிக்குத் தேவையானவற்றை சேகரிக்க தான் அங்கேயே நின்று விட்டார்.

எழுத்தாளர் ஒருவரின் மகளும், மன்னனின் மனைவியுமானவள் மஹாவிகாராவை அழித்த தேரா மீது கடும் கோபம் கொண்டு இருந்தாள். துபராமாவையும் அழிக்க சென்ற தேரா சம்ஹமித்தாவை கொன்று விட ஏற்பாடு செய்திருந்தாள். அவரை அவள் ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் கொன்ற பின் அமைச்சர் சோனாவையும் கொன்றனர். இதற்கு இடையில் மேஹாவன்னபைய்யா கட்டிடப் பணிக்கான பொருட்களை எடுத்துக் கொண்டு வந்து பல பரிவனாக்களைக் கட்டினார். புத்த பிட்குக்கள் மீண்டும் மன்னன் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கினர். போதி ஆலயத்தில் அற்புதமான வெண்கலச் சிலைகள் செய்யபப்பட்டு வைக்கப்பட்டன.

தக்கினராமாவில் *(Dakkhinarama)* இருந்தவரும், மன்னருடைய நல்ல நண்பரும், ஆனால் மனதில் தீய எண்ணங்கள் கொண்டிருந்த தேரா திஸ்ஸா ஜேதவான விகாராவை மஹாவிகாராவில் இருந்த ஜோதி வனத்தில் கட்டினார். அது

போல மற்ற விகாராக்களில் இருந்த சுவர்களையும் எடுத்து விடுமாறு அவன் பிட்குக்களை கட்டாயப்படுத்தத் துவங்க பலரும் விகாராக்களை விட்டு வெளியேறினர். ஆனால் சில பிட்குக்கள் அங்கேயே தங்கி விட்டனர்.

ஒன்பது மாதங்கள் பிட்குக்கள் இல்லாத இடமாக இருந்தது மஹாவிகாரா. சுவற்றை எடுத்து விட்டால் நமக்கு என்ன என்று அங்கிருந்த பல பிட்குக்கள் கருதத் துவங்கினர். அகவே மீண்டும் பல பிட்குக்கள் மஹாவிகாராவுக்கு வந்து தங்கத் துவங்கினர். ஆனால் அதை திரும்பி வந்தவர்களில் பலரும் சுவற்றை எடுப்பதை எதிர்த்ததினால் அந்த திட்டம் கைவிடப்பட்டது. அது மட்டும் அல்லலாது அந்த பிட்குக்கள் தேரா திஸ்ஸாவின் மீது பல குற்றச்சாட்டுக்களையும் கூறி குறிப்பாக தேஜதவனா கட்டிய விதத்திற்கு ஆட்சேபம் எழுப்பினர். அவற்றைக் கேட்டு உண்மைகளை அறிந்து கொண்ட நேர்மையான அமைச்சர் ஒருவர் மன்னனின் எதிர்ப்பையும் மீறி அந்த தேராவை *(திஸ்ஸா )* அங்கிருந்து வெளியேற்றினார்.

மன்னன் மன்னிஹிர விகாராவைக் *(Manihira-vihara)* கட்டினார். அதைத் தவிற மேலும் மூன்று விகாராக்களைக் கட்டினார். பிராமணரகள் வணங்கிய கடவுட்களை கொண்ட விகாராக்களான கோகன்ன *(Gokanna)*, ஏரகவில்லா *(Erakavilla)*, மற்றும் பிரும்மன் கண்டலா *(Brahman Kalanda)* போன்ற விகாராக்களை இடித்துத் தள்ளினார்.

மேலும் மிககாம *(Migagama)* விகாரா, , ககசேனகபப்பத்தா *(Gañgásenakapabbata)*, கிழக்கில் துதுசேனபபப்பத்தா *(Dhátusenapabbata)*, போன்ற விகாராக்களைக் கட்டினார்.

அவற்றைத் தவிற துபாராம விகாரா, ஹுலபித்தி *(Hulapitthi)* வகாராக்களையும் உத்தரா, அபயா என்ற பெயரில் இரண்டு கன்னி மாடங்களையும் கட்டினார். யக்கா கலவேலா *(Kalavela)* இருந்த இடத்தில் ஒரு ஸ்துபாவையும் கட்டி பல இடிந்திருந்த கட்டிடங்களை சீரமைத்தார். பிட்குக்களில் உயர்ந்த சம்மதேராக்கள் ஆயிரம் பேர்களுக்கு தானங்களும் வருடத்திற்கு ஒரு முறை பிட்குக்களுக்கு உடைகளும் கொடுக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அவர் செய்திருந்த தானங்கள் பற்றிய எழுதப்பட்டுள்ள செய்திகள் கிடைக்கவில்லை.

நாடு செழிக்க மனிஹிரா (*Manihira*), மஹாகமா, (*Mahagama*), சல்லுாறு (*Challura*), கானு (*Khanu*), மஹாமனி (*Mahamani*), கோகவாதாத் (*Kokavataand*), தம்மரம்மா, கும்பலாகா, வாஹனா, ரத்தமாலகண்டகா (*Dhammaramm*), திஸ்ஸாவட்டமானகா (*Tissavaddhamanaka*) , வேலாங்கவிட்டி (*Velangavitthi*) , சிரா (*Cira*) , மஹாதராகல்லகா (*Mahadaragallaka*) மற்றும் காலபாசன்னா (*Kalapasana*) போன்ற பதினாறு ஏரிகள் வெட்டினார். கங்கை நதியில் பப்பதன்தா என்ற கால்வாயைக் கட்டி பெரும் புகழ் பெற்றார்.

## இப்படியாக மஹாவம்சம்
## இனிதே முடிந்தது


CLICK HERE TO VIEW ENGLISH VERSION